# இப்படியும் கொண்டாடலாம்



திரைப்படங்களைச் சமுதாய மாற்றத்துக்கான கருவியாகக் காண விழைபவரும் அதற்காகத் தமிழ் ஸ்டூடியோ என்ற அமைப்பை நடத்திவருபவருமான அருண், இந்திய சினிமாவின் நூற்றாண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்துள்ளார். அதன் முக்கியப் பகுதியாக இந்திய சினிமாவின் 100 அரிய திரைப்படங்கள் சென்னை கோடம்பாக்கத்தில் உள்ள 5ஆவது தூண் அலுவலகத்தில் இலவசமாகத் திரையிடப்பட்டுவருகின்றன.

திரையிடுவதற்கான நூறு திரைப்படங்கள் எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகின்றன என்று கேட்டால் “மூன்று அடிப்படைகளில் இந்தத் திரைப்படங்களை தேர்ந்தெடுக்கிறோம். மிக அரிய திரைப்படங்கள் (உதாரணமாக இயக்குநர் மகேந்திரனின் சாசனம், ஃப்ரெஞ்சு நாவலை மையமாகக் கொண்ட ஏழை படும் பாடு, ஜெயகாந்தனின் யாருக்காக அழுதான்). இந்திய சினிமாவை உலக அளவில் திரும்பிப் பார்க்க வைத்த திரைப்படங்கள், ஏதேனும் ஒரு விஷயத்தைத் தெ £டங்கி வைத்த திரைப்படங்கள் ( 'ஒரே ஒரு கிராமத்திலே' என்ற படம் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட முதல் திரைப்படம்)” என்கிறார் அருண். திரையிடப்பட்ட திரைப்படங்கள் மீதான விவாதமும் நடைபெற்றது. அதில் அருண் வெளியிட்ட கருத்துக்களின் மூலம் அவர் தனக்கு பிடித்த படங்கள் அல்லது ஏற்புடைய கருத்துக்களைப் பேசிய படங்கள் என்ற அடிப்படையில் படங்களைத் தேர்ந்தெடுக்கவில்லை என்று தெரிந்தது. சாதிவாரி இட ஒதுக்கீட்டுக்கு எதிரான கருத்தை வலியுறுத்திய ஒரே ஒரு கிராமத்திலே படத்தின் மீது கடுமையான விமர்சனப் பார்வை கொண்டிருக்கிறார் அருண்.

தமிழ்ப் படங்கள் மட்டுமல்லாமல் மலையாளம், கன்னடம், இந்தி உள்ளிட்ட வேற்று மொழிப் படங்களும் திரையிடப்படுகின்றன. இதுவரை 30 படங்கள் திரையிடப்பட்டுவிட்ட நிலையில் டிசம்பர் மாதம் வரை இந்தத் திரையிடல் தொடர இருக்கிறது.

இதுவரை நடைபெற்ற திரையிடல்களுக்கு நல்ல வரவேற்பு இருந்துவருவதாகத் தெரிவித்த அருண் ”மற்ற ஊர்களிலும் இந்தப் படங்களைத் திரையிடக் கோரிக்கைகள் வருகின்றன” என்கிறார். இந்தத் திரையடலை நடத்துவதற்கான உழைப்பு மகத்தானது. ”இதற்காக நாங்கள் கடந்த மூன்றாண்டுகளாக உழைத்துவருகிறோம். பல படங்கள் படமும் ஒலியும் தனித்தனியாக இருந்தன. அவற்றை சரி செய்து திரையிடுகிறோம்.” என்கிறார் அருண்

இந்திய சினிமா நூற்றாண்டை ஒட்டி மேலும் சில நிகழ்வுகள்




ஒருங்கிணைத்திருக்கிறது தமிழ் ஸ்டுடியோ.

திரைப்பட ஆவணக் காப்பாளர் ஃபிலிம் நியூஸ் ஆனந்தன் சேகரித்துவைத்திருந்த இந்திய சினிமாவின் அரிய புகைப்படங்களின் கண்காட்சி சென்னை தேனாம்பேட்டையில் உள்ள கேலரி ஸ்ரீபார்வதியில் அக்டோபர் 12 அன்று தொடங்கியது. ஓவியர் ட்ராட்ஸ்கி மருது, இயக்குநர் லிங்குசாமி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்று கண்காட்சியைத் திறந்துவைத்தார்கள். இந்நிகழ்வில் பங்கேற்ற ஃபிலிம் நியூஸ் ஆனந்தன் “திரைப்படங்களை ஆவணப்படுத்துதல் குறித்து தமிழக அரசுக்கு அக்கறை இல்லை. என்னை போன்றவர்கள் சேகரித்துவைத்துள்ள ஆவணங்களை பாதுகாப்பதற்கு உதவும் மனமும் இல்லை. என் முயற்சிக்கு உரிய அங்கீகாரமும் கிடைக்கவில்லை” என்று ஆதங்கப்பட்டார் என்றும் அருண் தெரிவிக்கிறார். முகநூலில் தொடர்ந்து தகவல் தெரிவிக்கப்பட்டு மூன்று நாட்கள் நடைபெற்ற இந்த கண்காட்சிக்கு மொத்தமாக சுமார் 200 பார்வையாளர்கள் வந்து சென்றார்கள் என்கிறார் அருண் .

இது தவிர நவம்பர் 16, 17 ஆகிய தேதிகளில் ஒளிப்பதிவுக்கான பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. ஒளிப்பதிவாளர் சி.ஜே. ராஜ்குமார் பயிற்சியளிக்கப்போகிறார்.

இந்த வகுப்புகளில் பங்கேற்க 1200 ரூபாய் கட்டணம் செலுத்தி முன்பதிவு செய்துகொள்ள வேண்டும். இந்த வகுப்புகளில் ஒளிப்பதிவோடு திரைப்படம் சார்ந்த பல்வேறு நுணுக்கங்கள் விளக்கப்பட இருக்கின்றன என்று அருணின் முகநூல் குறிப்பு தெரிவிக்கிறது.

கடைசியாக, இந்தக் கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக இந்திய சினிமா தொடர்பான முக்கியமான மூன்று புத்தகங்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட இருக்கின்றன. அதற்கான வேலைகள் முழு வீச்சில் நடைபெற்றுவருவதாகத் தெரிவிக்கிறார் அருண்.




இந்திய சினிமாவின் நூற்றாண்டு நிறைவைக் கொண்டாடும் விழா அண்மையில் சென்னையில் நடந்து முடிந்தது. தமிழக அரசு முன்னின்று நடத்திய இந்த விழா மீது பல விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. இதைச் செய்யவில்லை அதைச் செய்யவில்லை என்று பலர் குறைபட்டுக் கொண்டார்கள். அருண் குறைபட்டுக்கொள்வதோடு நில்லாமல் சினிமாவை எப்படியெல்லாம் கொண்டாடி யிருக்கலாம் என்பதைச் செய்தும் காட்டியிருக்கிறார். அவரது இந்த முயற்சி இந்திய சினிமாவின் பெருமையைப் மக்கள் மத்தியில் பரப்ப உதவுகிறது என்றால் அது மிகையல்ல.

**தமிழ் ஸ்டூடியோ ஒரு அறிமுகம்**

சென்னையில் எம்.சி.ஏ படித்துவிட்டு லண்டனில் டி.எ.ஃப்.டெக் (திரைப்படத் தொழில்நுட்பத்துக்கான பட்டயக் கல்வி) படித்தவரான அருண் இங்கு ஒரு மென்பொருள் நிறுவனத்தில் பணியாற்றிக்கொண்டே தமிழ் ஸ்டூடியோவை 2008இல் நண்பர் ஒருவரின் உதவியுடன் தொடங்கினார் குறும்படங்களை மாற்று சினிமாவுக்கான தளமாகத் தேர்ந்தெடுத்து செயல்படத் தொடங்கினார்கள்.சமுதாயத்தின் மீது அக்கறையுடன் எடுக்கப்பட்ட பல்வேறு குறும்படங்களை தயாரித்தல், சந்தைப டுத்துதல், மக்கள் மத்தியில்

கொண்டுசெல்தல் ஆகியவை இந்த அமைப்பின் முக்கியச் செயல்பாடுகளாக இருந்தன அதன்பின் திரைப்படங்களின் பக்கம் இவர்களின் கவனம் திரும்பியது.

மாற்று சினிமாவைக் கொண்டுவர இவர்கள் இரண்டு முக்கியமான பணிகளைச் செய்கிறார்கள். நல்ல சினிமாவுக்கான தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் கலைஞர்களை உருவாக்குதல். நல்ல சினிமாவை ரசிப்பதற்கு பார்வைய £ளர்களை பயிற்றுவித்தல். இதற்காக தமிழகமெங்கும் ஊர் ஊராகச் சென்று நல்ல படங்களை இலவசமாகத் திரையிடுகிறார்கள். கலைஞர்களை உருவாக்க படிமை என்ற பயிற்சிக் குழுவை நடத்திவருகிறர்கள். இதன் மூலம் தொழில்நுட்ப விஷயங்களை பயிற்றுவிப்பதோடு உள்ளடக்கத்தையும் சிறப்பாகவும் சமுக அக்கறை கொண்டவையாகவும் உருவாக்க பயிற்சி தருகிறார்கள். இதனால் படிமை அமைப்பில் திரைப்பட ஆளுமைகள் மட்டுமல்லாமல் எழுத்தாளர்கள், இதழியலாளர்கள், களப்பணியாளர்கள், சமூக அக்கறைகொண்ட தொழில்முனைவோர் ஆகியோரும் பயிற்றுனர்களாக இருக்கிறார்கள்.

பிரதிமாதம் இரண்டாவது சனிக்கிழமைகளில் இவர்களின் குறும்பட வட்டத்தின் குறும்படங்கள் திரையிடப்பட்டு விவாதம் நடைபெறுகிறது. பௌர்ணமி தினத்தன்று ஏதேனும் ஒரு திரைப்படத்தை திரையிட்டு பார்வையாளர்களுடன் அதன் அழகியல், அரசியல் ஆகியவை பற்றி விடிய விடிய விவாதிக்கிறார்கள்.

http://nammachennai.in/article.aspx?issue=1-Nov-2013&category=Nigazhvu&article=20131110040420